19.11.2025 Mcop 62/2023 ம.சா1 சுடலை

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 4 ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் இறந்துபோன பத்திரகாளியின் கணவர் என்றால் சரிதான். 4 ம்எதிர்மனுதாரர் சுடலை என்ற சூர்யா எனது உடன்பிறந்த அண்ணன் மகன் என்றால் சரிதான். சூர்யாவின் தாயார் எனது மனைவியின் உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். என் அண்ணன் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரும் விபத்தின் போது குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். விபத்திற்கு முன்னர் எனது மகள் பூப்பெய்துவிட்டதால் அந்த நிகழ்ச்சிக்காக எனது அண்ணன் குடும்பத்தினர் வந்திருந்தனர். விபத்து நடந்து அன்று அழைப்பிதழ் கொடுப்பதற்காக நான் எனது மனைவி மற்றும் எனது அண்ணன் மகன் சூர்யா ஆகியோர்கள் இரண்டு இருசக்கர வாகனத்தில் சென்றிருந்தோம் என்றால் சரிதான். என் மனைவி இருசக்கர வாகனத்தில் சூர்யாவுடன் வந்தார். சூர்யா ஒட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் கே.எல்.04.ஏ.டி.2173 ஆகும். நான் எனது வாகனத்தில் தனியாக வந்தேன். விபத்தானது குமந்தாபுரம் போய்விட்டு திரும்ப வரும்போது நடைபெற்றது. விபத்தின் போது சூர்யா ஒட்டி வந்த வாகனத்தில் எனது மனைவி பயணம் செய்தரர். நான் தனியாக வந்தேன் என்றால் சரிதான். விபத்து எவ்வாறு நடந்தது என்றால் எதிரே வந்த கார் அஜாக்கிரதையாக வந்து சூர்யா ஒட்டி வந்த வாகனத்தின் மீது மோதிவிட்டது. சூர்யா என்பவருக்கு காயங்களும், எனது மனைவி சம்பவயிடத்தில் இறந்து விட்டார். எனது மனைவியை ஆம்புலன்சில் ஏற்றி சென்ற போது இறந்து விட்டார் என்றால் சரிதான். விபத்தில் சூர்யாவிற்கு இரண்டு கால்களிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு

சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்றால் சரிதான். விபத்திற்கு பின்னர் தான் அந்த காருக்கு காப்பீடு எடுக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. விபத்தை ஏற்படுத்திய காரின் உரிமையாளர் ஏதேனும் பேச்சுவார்த்தை நடத்தினார்களா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் நான் சொன்ன விபரங்கள் உள்ளது என்றால் சரிதான். என் அண்ணனுக்கு 4ம் எதிர்மனுதாரர் மட்டுமே ஆண்வாரிசு என்றால் சரிதான். சூர்யாவிற்கு வயது 23 இருக்கும். 4ம்எதிர்மனுதாரருக்கு ஒட்டுனர் உரிமம் உள்ளது. 4ம்எதிர்மனுதாரர் வாகனத்திற்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.